பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 ஆனி 31 றஜப் 27 இதழ் 154

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15-7-77

# வேலைக்குத் திரும்புமாறு விடுத்த கோரிக்கையை ஏற்க மறுப்பு!

## பஸ் ஊழியர் வேலை நிறுத்தம் நீடிப்பு

புலோலி, வெள்ளி

கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம்பமான பருத்தித்துறை இ.போ. ச டிப்போ ஊழியர்களின் திடீர் வேலைநிறுத்தம் தொடர்ந்து நீடித்து வருகிறது. வேலைக்கு உடனடியாக திரும்புமாறு தலைமைப் பீடம் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ள ஊழியர்கள் மறுத்து விட்டனர் எனத் தெரியவருகிறது.

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த (பஸ் கண்டக்டர்களும் சாரதிகளும்) 242 ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

இளைஞர்கள் விரும்பிப் படிப்பது

"சாமினி"

எழுதிய

இரண்டாவது புத்தகம்

"தேர்தல் கேள்விபதில்"

# 'அடுத்த தேர்தலின் முன் தமிழீழம் கிடைக்கும்!"

யாழ்ப்பாணம், வெள்ளி

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியமான 'தமிழ் ஈழம்' அடுத்த தேர்தலுக்கு முன் அமைந்துவிடும். இந்நிலையில் அடுத்த தேர்தலைப் பற்றியோ, காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகளைப் பற்றியோ பேசுவது வீண் சர்ச்சை.**

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரான திரு எம் சிவசிதம்பரம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. சிவசிதம்பரம் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழர்விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக்குழு தமிழர் விடுதலைக் கூட்டணியை ஓர் அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சியாகப்பதிவு செய்வதென்றும் அதன்சார்பில் தான் அபேட்சகர்கள்நிறுத்துவதெனவும் முடிவுசெய்தது. அதன் பிரகாரமே அங்கீகாரத்திற்கு மனுச்செய்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அபேட்சகராக பருத்தித்துறைத்தொகுதிக்குதன்னை நியமிக்கும் படி திரு குமார் பொன்னம்பலம மனுச்செய்ததிலிருந்து இந்த முடிவை அவரும் ஏற்றுக் கொணடார் என்பது தெளிவாகிறது.

இம்முறை தமிழ்க்காங்கிரஸ் கட்சிசார்பில் வேட்பாளர்களை நிறுத்தாமையினுல் எதிர்காலத்தில் தமிழ்க் காங்கிரஸ்கட்சி அழிந்து விடுமென்று திரு. குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டவிடயம் அடுத்த தேர்தலைப் பொறுத்தது. அதற்கு முன் நமது லட்சியமாகிய தமிழ்ஈழம் கைகூடும். அந்த நிலையில் இந்த விடயத்தைப் பற்றி பேசுவது வீண்சர்ச்சை எது எப்படியிருப்பினும் தமிழர் விடுதலை கூட்டணி இனிமேல்பிரியாதுபிரியவிடவும் மாட்டோம் ஆகையினுல் தமிழ்க்காங்கிரஸ் தமிழரசு என்று பேசுவதில் அர்த்தமில்லை.

தேர்தல் சட்டத்தின் 28-ம் ஷரத்தின் கீழ் 1950-ம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற கட்சிதொடர்ந்து அங்கீகாரம் பெறுவதற்கு இரண்டுநிபந்தனைகளுண்டு.

1. குறிப்பிட்டதேர்தலுக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## அந்தச் சில நேரங்களில்....

நியுயோர்க், ஜுலை 14

நியுயோர்க் நகரில் நேற்றிரவு திடீரென சில மணி நேரம் மின்சாரம் தடைப்பட்டது. அந்தச் சில மணி நேரத்தைப் பயன்படுத்தி பலர் தங்கள் கைவரிசையைக் காட்டிவிட்டனர்!

திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டனர் என்ற காரணத்துக்காக 15,000 க்கும் அதிகமானவர்களை அந்த இருட்டு வேளையில் பொலிஸார் கைது செய்துள்ளனர்!

### காங்கேசன்துறை சம்பவம்:

## பொலிஸார் இடமாற்றம்

### இருவர் தற்காலிக வேலைநீக்கம்?

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த செவ்வாய்க் கிழமை இரவு காங்கேசன் துறைச் சந்தியில் நடைபெற்ற பயங்கரத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு கான்ஸ்டபிள்மார், சுன்னுகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறைபொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு கான்ஸ்டபிள்மார் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படலாம் என்றும் தெரியவருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மாவிட்டபுரத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக் கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பியவர்கள், காங்கேசன்துறை சந்தியில் தாக்கப்பட்டதும் பின்னர் இவர்கள், பொலிஸ் நிலையம் செல்லப் பயந்து, பொலிஸ் அதிகாரிகளின் வீடுகளுக்குச்

(6-ம் பக்கம் பார்க்க)

# "விடுதலைப் போராட்டத்தில் மாணவர், இளைஞர் பங்கு"

யாழ்ப்பாணம், வெள்ளி

''தமிழர் விடுதலைக் கூட்டணி சர்வசன வாக்கெடுப்பைத் தேர்தல் என்ற பெயரில் நடாத்துகிறது. சர்வசன வாக்கெடுப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றியீட்டும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இத்தேர்தல் வெற்றியின் பின்னர் தொடர்ந்து அடுத்தடுத்து நிகழ இருக்கும் விடுதலைப் போராட்டங்களில் தமிழ் மாணவரும் இளைஞர்களும் இன்றுகாட்டும் இதே உற்சாகத்துடன் பெருந்தொகையாகக் கலந்து கொள்ளவேண்டும்''

இவ்வாறு சிறைமீண்டவரும் ஈழ விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒருவருமான திரு. த. முத்துக்குமாரசுவாமி கூறினர்.

யாழ். முற்றவெளிமைதானத்தில் யாழ்ப்பாணத் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர் சட்டத்தரணி திரு. வெற்றிவேலு யோகேஸ்வரனை ஆதரித்து நிகழ்ந்த மாணவர் எழுச்சிக்கூட்டத்திற்கு யாழ். வளாகமாணவர் திரு. தர்மராசா தலைமை தாங்கினர். கூட்டத்தில் பெருந்தொகையான மாணவப் பிரதிநிதிகள் பாடசாலைகள் சார்பாக உரையாற்றினர். மாணவிகளும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

கொழும்பு சட்டக்கல்லூரி மாணவர்கள் சார்பாக உரை நிகழ்த்திய திரு. முத்துக்குமாரசுவாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

1970-ம் ஆண்டு தரப்படுத்தல் அநியாயத்தை எதிர்த்து இம்மைதானத்தில் மாணவர்கள் நடாத்திய கூட்டத்தில் கண்ட அதே எழுச்சியையும் மக்கள் வெள்ளத்தையும் இன்று இம்மைதானத்தில் காண்கின்றேன்.

தரப்படுத்தலை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலமும் எதிர்ப்புக்கூட்டமும் நாம் நடாத்தியவேளையில் எமக்கு சகல விதத்திலும் உதவி புரிந்தவர் திரு. யோகேஸ்வரன். அவர் அன்றுதொட்டு இன்றுவரை மாணவ உலகினதும் இளைஞர் உலகினதும் காவலராகத் திகழ்ந்துவருகிறார்.

தரப்படுத்தல் எதிர்ப்பு ஊர்வலத்தின் பின்பே பெருந்தொகையான மாணவர்கள் அரசியலில் பிரவேசம்செய்து

[6-ம் பக்கம் பார்க்க]

## கோவில் சேவலும் கூவிற்று!

கம்பளை, வியாழன்

நுவரேலியாத் தொகுதியில் இ. தொ. கா. சார்பில் போட்டியிடும் அதன் தலைவர் திரு. எஸ். தொண்டமான் அண்மையில் புசல்லாவை ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி கோயிலில் சுவாமிதரிசனம் செய்தபோது அங்கே நின்ற சேவல் ஒன்று கூவியது.

சேவல் சின்னத்தில் போட்டியிடும் திரு தொண்டமான் சுவாமிதரிசனம் செய்தபோது சேவல் கூவியதால் அவரது வெற்றி நிச்சயம் என்று அங்கிருந்தோர் கூறிக்கொண்டனர்.

## முக்கிய அறிவித்தல்

### தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம்

ஷெ ஆலயத் திருப்பணி, நிர்வாகம் என்பவற்றை முன்னிட்டு அடியார்களிடமிருந்து அன்பளிப்புப் பெறுவதற்கு ஆலய நிர்வாகசபையினர்க்கே அதிகாரம்உண்டு எனவும் வேறு எந்தச் சங்கமோ அல்லது தனிப்பட்டவர்களோ அன்பளிப்புக்கோரினுல் ஆலயத்தின் பேரிலே எந்த நன்கொடைகளையும் வழங்கவேண்டாமென்பதையும் சைவஅன்பர்களையும் அருள் வள்ளல்களையும்,கேட்டுக் கொள்கிறோம்.

க. சிவவாகீசர்,
க. தணிகாசலம்
இணைச்செயலாளர்.

தங்கம்மா அப்பாக்குட்டி,
நிர்வாகசபைத்தலைவர்.

6653

## காணவில்லை

கல்கமுவா 175-ம் இலக்கக் கடை முதலாளி A. V. N. சிவராசா 8-7-77 முதல் காணவில்லை. இவர் நிறம் கறுப்பு. வெள்ளைச்சாரமும், இளம் நீலச் சட்டையும் அணிந்திருக்கிறார். இவரைக்கண்டவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில், அல்லது கடை விலாசத்திற்கு, அல்லது கல்கமுவா தபால் நிலையத்திற்கு அல்லது நாதன்ஸ், வாரிவளவு, காரை நகர் விலாசத்திற்கோ அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். த. க. பத்மநாதன், நாதன்ஸ், காரைநகர்.

6658

மணிவசக்கு

சொர்த நாடு உனக்குத் தங்கத் தொட்டில்.
—சோவியத் பழமொழி

ஈழநாடு
THE EELANAADU

## மருத்துவ மாதர் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மருத்துவ மாதர்களின் வேலைநிறுத்தத்திற்கு இதுவரை முடிவு ஏற்படவில்லை. இதற்குச் சுமுகமான தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காக யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அத்யட்சகர் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மருத்துவ மாதர் வேலைநிறுத்தம் தொடங்கி ஒரு வாரத்துக்கு மேலாகின்றது. இப்பொழுதுதான் சுமுகத் தீர்வுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு ஆஸ்பத்திரி வைத்திய அத்யட்சகர் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

அரசாங்கச் சேவைகள் எல்லாமே அத்தியாவசிய சேவைகள்தான். என்றாலும் ஆஸ்பத்திரிச் சேவை, மனித உயிர்கள் சம்பந்தப்பட்ட மிக மிக அத்தியாவசிய சேவையாகும்.

வசதியுள்ள நோயாளிகள் தனியார் மருத்துவமனைக்குச் செல்ல முடியும். நாட்டின் பல பகுதிகளிலும் வசதிகள் நிறைந்த தனியார் மருத்துவமனைகள் நிறைய இருக்கின்றன. பெரும்பாலும் வசதி குறைந்த நோயாளிகளுக்காகவே 'தர்மாஸ்பத்திரி' என்று அழைக்கப்படும் அரசாங்க மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரசாங்க மருத்துவமனைகளில் டாக்டர்களோ தாதிகளோ மருத்து மாதர்களோ வேலைநிறுத்தஞ்செய்வதும் அந்த வேலைநிறுத்தத்திற்கு உடன் முற்றுப்புள்ளி வைக்காமல் நீடிக்க விடுவதும் ஏழை எளிய மக்களின் உயிருடன் விளையாடுவதற்கு ஒப்பாகும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனை, யாழ்ப்பாண நகருக்கு மட்டும் உரியதன்று. யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலுமிருந்து நோயாளிகள் இங்கு வருகின்றனர். பல கஷ்ட நஷ்டங்களையும் தாங்கிக்கொண்டு சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு ஆஸ்பத்திரியில் திடீர்திடீரென்று நடைபெறும் சட்டப்படி வேலை இயக்கமும் வேலைநிறுத்தங்களும் தொல்லைக்கு மேல் தொல்லை கொடுப்பதாக இருக்கிறது.

ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு. வெளியில்தான் அதிக விலை கொடுத்து மருந்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம்.

இந்நிலையில் வேலைநிறுத்தங்களும் நடைபெறுவதாயின் மக்களின் வரிப் பணத்தில் இந்தத் 'தர்மாஸ்பத்திரி'கள் நடைபெறத்தான் வேண்டுமா?

ஆஸ்பத்திரிக்கென்று வைத்திய அத்யட்சகர் இருக்கிறார். இதற்கு மேல் அந்தந்த மாவட்டத்திற்கெனச் சுகாதார அத்யட்சகரும் இருக்கிறார். ஆஸ்பத்திரியில் வேலைநிறுத்தம் ஒன்று ஆரம்பித்ததும் உடன் இதற்குத் தீர்வுகாண்பதற்கு இந்த அதிகாரிகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். இந்த அதிகாரிகள் எடுக்கும் முயற்சி உடன் பயன் தராவிட்டால் உடனடியாகக்கொழும்பிலுள்ள அமைச்சு அதிகாரிகளாவது ஸ்தலத்திற்கு விரைந்து ஒரு முடிவு கண்டு நோயாளிகளைக் காப்பாற்ற வேண்டியது அவசியம்.

இல்லையேல் ஆஸ்பத்திரி ஊழியர்களின் எந்தப் பிரச்னைக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டுமேயொழிய வேலைநிறுத்தத்தின் மூலமல்ல என்றாவது சட்டம் கொண்டுவர வேண்டியது அவசியமாகும்.

யாழ் ஆஸ்பத்திரி மருத்துவ மாதரின் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக அரசாங்க ஊழியர் சங்கமும் வேறு சில ஊழியர் சங்கமும் வேலைநிறுத்தம் செய்யப் போவதாகத் தெரிவித்திருந்தன.

நல்ல காலமாக அவர்களும் வேலைநிறுத்தத்தில் இறங்கி, மருத்துவ மாதரின் வேலைநிறுத்தம் இதுவரை பரவாமல் இருப்பது பெரும் காரியம்.

இனியும் மருத்துவ மாதரின் வேலைநிறுத்தம் நீடிக்காமல் சுகாதார அமைச்சு உடன் ஒரு நல்ல தீர்வு ஏற்படுத்துமென்று எதிர்பார்ப்போம்.

# இலங்கை தமிழ் மக்களுக்கு

## லண்டன்மாணவர் கோரிக்கை

லண்டன், ஜூலை 14

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக அளிக்கப்படும் வாக்குகள் தமிழினமும் தமிழ் மொழியும் தொடர்ந்து அடிமையாக இருப்பதற்கு ஆதரவாக அளிக்கப்படும் வாககுகளே. தமிழ்மக்கள் இதை உணர்ந்து தமது வாக்குகளை தமிழர் கூட்டணிக்கே இட வேண்டும்.

லண்டன் வாழ் தமிழ் இளைஞர்களின் சார்பில் லண்டன் தமிழ் மாணவர் பேரவையினர் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

இவ்வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஈழத்தமிழ்த் தேசிய இனத்தின் வரலாற்றிலே ஒரு திருப்புமுனையாகத் தேர்தல் ஒன்று நிகழவிருக்கும் இந்தக்கட்டத்தில் கடல்கடந்து வாழும் துடிப்புள்ள இளைஞர்களாகிய நாம் விடுக்கின்ற ஒரு பணிவான வேண்டுகோள்.

இன்று தமிழன் ஈழத்திலே அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு மொழியுரிமை, மதஉரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டுப் பஞ்சைகளாய் - பராரிகளாய் வாழுகின்ற நிலைமையை நாம் நன்கு உணர்வோம்.

கடந்த முப்பது ஆண்டுக் காலங்களில் மாறிமாறி ஆட்சி பீடமேறியசிங்கள அரசியல்கட்சிகள் போட்டிபோட்டுச் சிறுபான்மையினத்தின் உரிமைகளைப் படிப்படியாகப் பறித்து வந்தன. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல கடந்த ஏழு ஆண்டுகளில் ஆட்சி புரிந்த அரசாங்கமும் நடந்துகொண்டது. தரப்படுத்தல் என்ற போர்வையிலே தமிழ் மாணவர்களின் எதிர்காலத்தையே தரப்படுத்தி எம்போன்ற இளைஞர்களை வாழ வழிதேடி வெளிநாடு செல்லவும், இன்னும் பல இளைஞர்களை வாழ்வில் விரக்தியுற்று வன்செயல்களில் ஈடுபடவும் வழிவகுத்தமை; புதிய அரசியலமைப்புச் சட்டம் என்ற போர்வையில் தமிழ்மொழியை முற்றாகப் புறக்கணித்துச் சிங்களத்திற்கும் பௌத்தத்திற்கும் மட்டுமே இந்நாட்டில் இடமுண்டென்று தெளிவாக தெரிவித்தமை, 74ல் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் கூடியிருந்த அப்பாவி மக்களில் பத்துப்பேரைப் பரிதாபமாக உயிரிழக்கச் செய்தமை, இக்கொடுமைகளைக் கண்டு மனம் பொறுக்காத தீரன் சிவகுமாரனை எமது விடுதலை வேள்விக்குப் பலிகொடுத்தமை, இதையடுத்துப் பொலிஸ் இராணுவ அட்டகாசங்கள், புத்தளம் மசூதியில் புனித வழிபாட்டில் ஈடுபட்டிருந்த இஸ்லாமியச் சகோதரர்கள் ஏழு பேரைச் சுட்டுக்கொன்றமை, சமீப காலத்திலே தோட்டப் பகுதியில் இரவோடிரவாகத் தமிழ்த்தொழிலாளர்களை அடித்து விரட்டிச் சிங்களவரைக் குடியேற்றியமை, டெவன் தோட்டத்தில் இளைஞன் இலட்சுமணனை, வாழ நிலம் கேட்ட ஒரே காரணத்திற்காக எமனுக்கு விருந்தாக்கியமை, டெல்டா, சங்குவார் தோட்டங்களில் பட்டப்பகலில் தொழிலாளர் லயன்களில் அத்துமீறிப் புகுந்து அவர்களை அடித்து நொறுக்கி, இருந்த அற்பசொற்ப உடைமைகளைத் தீவைத்தவர்களுக்கு அரச வாகனங்களைக் கொடுத்து உதவியமை இவையெல்லாம் இங்கிருக்கும் எமது இதயங்களில் ஆழப் பதிந்து விட்ட வடுக்கள். இந்த நேரத்திலே ஐந்தாண்டு காலமாக விடுதலைக்காகப் போராடி வரும் தமிழ்ப் பேசும் மக்களின் ஒரே அணி தமிழர் விடுதலைக்கூட்டணி என்பதை யாமறிவோம்.

இத்தகைய கொடுமைகள் நிறைந்த நேரமெல்லாம் துடித்தெழுந்தவர்கள் நாங்கள். இப்பிரச்னைகளைச் சர்வதேசஅரங்கில் ஒலிக்கச்செய்ய நாம் எடுத்துவந்த முயற்சிகளை நீங்கள் அறிவீர்கள். இந்நிகழ்ச்சிகளின வாயிலாக லண்டன் உட்பட உலக நாடுகளின் பத்திரிகைகளிலே எமது பிரச்சனைகள் வெளிவந்தன. இத்தகையமுயற்சிகளை எல்லாம் நாம் எடுப்பதற்கு ஒரு தார்மீக பலத்தை எமக்கு அழித்தது, தமிழர்கள் எல்லாம் ஒன்றுபட்டு ஒரேஅணியின்கீழ் நிற்கின்றார்கள் என்ற உணர்வினால் எழுந்த உத்வேகமே எனவேதான் எமது தாயகத்திலே தேர்தல் என்றதும் இரட்டிப்பு மகிழ்வு எய்துகிறோம். தமிழ்ஈழக் கோரிக்கையைத் தமிழ்ப்பேசும் மக்களின் முன்வைத்து, அவர்கள் அதற்கு அளிக்கும் ஆமோக ஆதரவின் துணைகொண்டு உலகஅரங்கிலே எமது குரலை ஓங்கி, ஒலிக்கச் செய்வதற்கு, உறுதுணையாக இத்தேர்தல் அமையப் போகிறது. இதைத் தொடர்ந்து தமிழ்ஈழம் அமைக்கும் பாரிய பணியின் ஒருபங்காகப் பற்பல போராட்டங்களை நடாத்துவதற்கு இத்தேர்தல் முடிவுகளையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எந்தவொரு காரணத்தைக் கொண்டும் கூட்டணி அல்லாத எந்தத் தனிநபருக்கோ அன்றி வேறேதும் அரசியற் கட்சிகளுக்கோ உங்கள் வாக்குகளை இட்டால், அது தமிழனும், தமிழ்மொழியும் தொடர்ந்தும் அடிமையாக இருப்பதற்கு ஆதரவாக அளிக்கப்படும் வாக்குகளே. எனவே எமது எதிர்காலச் சந்ததியை மனதிற்கொண்டு இன்று வெளிநாடுகளிலே வாடிக்கொண்டிருக்கும் எம்போன்ற இளைஞர்களின் முகங்களை மனதிற்கொண்டு ஆயிரமாயிரமாக அணியணியாகத் திரண்டு சென்று தமிழ் ஈழக் கோரிக்கைக்கு, அதாவது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உங்கள் ஆதரவை அளித்து வெற்றிவாகை சூடச்செய்வீர்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் உங்களிடம் இவ்வேண்டுகோளை விடுக்கின்றோம். (கி)

## நியூற்றன் குண்டு உற்பத்தி: அமெரிக்க செனட்டும் ஏற்றது

வாஷிங்டன், ஜூலை 14

பயங்கர 'நியூற்றன்' குண்டு உற்பத்திக்கு அமெரிக்க செனட் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இக் குண்டு உற்பத்தி தொடர்பாக குடியரசுக்கட்சித் தலைவர் திரு ஹார்வில்ட் செனட்சபையில் கொண்டு வந்த திருத்தப்பிரேரணை மீது ஒருநாள் முழுவதும் விவாதம் நடைபெற்றது. இதனையடுத்து நடைபெற்ற வாக்கெடுப்பின் போது பிரேரணைக்கு ஆதரவாக 33 வாக்குகளும், எதிர்த்து 53 வாக்குகளும் கிடைத்துள்ளன.

அமெரிக்கா புதிதாகக் கண்டுபிடித்துள்ள இக்குண்டு சொத்துக்களையோ இயந்திரங்களையோ பாதிக்காது, மனித உயிர்களை போக்கு தன்மை வாய்ந்தது. இதே சமயம், அமெரிக்காவின் இம் முடிவுக்கு ரஷ்யா கண்டனம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' வெளியிட்ட செய்தியில் 'இது மனித அழிவுக்கு வழி வகுக்கும்' என்று குறிப்பிட்டுள்ளது.

இக் குண்டு உற்பத்திக்கு ஜனாதிபதி திரு. கார்ட்டர் நேற்று ஆதரவு வழங்கியது குறிப்பிடத்தக்கது. (உ)

## "அணு ஆயுதம் உள்ளவரை பந்தோபஸ்துக் கிடையாது"

### இந்தியப்பிரதமர் கூறுகிறார்

புதுடில்லி, ஜூலை, 14

"அணு ஆயுதங்கள் இருக்கும் வரை ஆசியாவிலோ வேறெந்த நாடுகளிலோ பந்தோபஸ்து நிலவும்வாய்ப்பு இருக்கப் போவதில்லை" என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இன்று லோக்சபாவில் பேசுகையில் கூறினார்.

"இருவல்லரசுகளுக்கு மத்தியிலான போட்டிகளில் இருந்து ஆசியா தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் திரு. தேசாய் சென்னார்.

வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாய் நேபாள விஜயம் மேற்கொண்டுள்ளதால் அவர் சார்பில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு திரு. தேசாய் பதிலளித்தார். (உ)

## ஆட்சியை அமைக்கஜனாதிபதி தம்மையே அழைப்பாராம்

### பிரதமர் சிறிமா நம்பிக்கை

கொழும்பு, வியாழன்

எதிர்வரும் 22ந் திகதி ஆட்சிப்பொறுப்பேற்கும் படி என்னையே ஜனாதிபதி அழைப்பார் என்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கொறனையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: சகல தொகுதிகளையும் பார்த்த மட்டில் எமது கட்சிக்கு அமோக ஆதரவு உள்ளதாக தெரிகின்றது. ஐ தே.கட்சியின் அரசாங்கம் இருந்தபோது தீர்த்து வைக்கப்படாத பல பிரச்னைகளை எமது அரசாங்கமே தீர்த்து வைத்துள்ளது.

கடந்த தேர்தலின் போது மக்களித்த ஆதரவைப்போல் இம்முறையும் ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

ஏப்ரல் கிளர்ச்சி சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளித்தது எமது அரசாங்கமே இவர்களை விடுதலை செய்ய வேண்டாம் என்று டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா கூறினார். ஆனாலும் அதற்கு செவிசாய்க்காமலும் செயல்பட்டிருக்கின்றோம். மேலும் பலரும் உரையாற்றினர். (ம-கு)

ஆசிரியருக்குக்கடிதம்:

### நானல்ல

5-7-77-ம் திகதிய ஈழநாடு பத்திரிகையின் 6-ம் பக்கத்தில் ஆலாலுடன் விவாதிக்க குமாரை அனுமதியோம் என்ற தலைப்பில் பிரசுரமான செய்தியில் "அராலியூரான்" பேசியதாக இருப்பது நானல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நா.க. தங்கரத்தினம்
("அராலியூரான்")

## "தந்தை இல்லாததால் தரப்படுத்தல் வந்தது"

### ஜி.ஜி.யின்மகன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி.

"தரப்படுத்தல் எனதுதந்தை அமரர் ஜி. ஜி. பாராளுமன்றத்தில் இல்லாத காலத்தில் தான் கொண்டுவரப்பட்டது, அவர் இருந்திருந்தால் இந்த அநீதியைத் தலைதூக்கவிட்டிருக்கமாட்டார்."

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தொகுதி சுயேச்சைவேட்பாளரும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணித் தலைவருமாகிய திரு. ஜி. ஜி.(குமார்) பொன்னம்பலம், திருவாளர்கள் நீ. மருசலீன், மு. துரை, செ. இராசரெட்டினம் ஆகிய முக்கூட்டுத் தலைவர்கள் தலைமையில் நாவாந்துறைச் சந்தைக்கு அருகாமையில் நடைபெற்ற தேர்தல்பிரச்சாரக் கூட்டத்தில் குடுப்பிட்டார்.

அவர்மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:- பல்கலைக் கழக வளாகங்கள் தனித்தியங்கும் நிலைவந்தால் கொழும்பிலுள்ள ஒரு கூட்டத்தில்மாணவர்களது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்காது அவ்வவ் வளாகங்களே பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களை அனுமதிக்க முடியும். அதனால் இத்தரப்படுத்தல் பிரச்னைக்குப் பரிகாரம் காணமுடியும்.

"தனது 34வதுவயதில் பருத்தித்துறை கடல்தொழில் மக்களது ஆதரவுடன் அரசியலுள் பிரவேசித்தார் எனது தந்தை

(6-ம் பக்கம் பார்க்க)

# அரபுநாடுகள்-இஸ்ரேலிய உறவு மலர்வது சாத்தியமே

## எகிப்திய ஜனதிபதி கூறுகிறர்

கெய்ரோ, ஜுலை 14

அரபு நாடுகளுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே சுமுகமான உறவுகள் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு என்று எகிப்திய ஜனதிபதி அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க காங்கிரஸ் குழு ஒன்று அலெக்ஸான்டிரியா சென்ற சமயம் ஜனதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ம கி பிரச்னை சுமுகமாகத் தீர்வதன் மூலம் எல்லைகளைத் திறத்தல், ராஜதந்திர பொருளாதார உறவுகள் மலர்தல் என்பன சாத்தியமாகும் என்றுர் அவர்.

### இஸ்ரேலியப் பிரதமர் ஆலோசனை

இதேவேளை, அடுத்தவாரம் அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கும் இஸ்ரேலியப்பிரதமர் திரு. பெகின் நேற்று தமது அமைச்சரவையைக்கூட்டி மத்திய கிழக்குப் பிரச்னை குறித்து ஆலோசனை நடத்தினர்.

மூன்று மணித்தியாலங்கள் இந்த ஆலோசனை நீடித்தது.

தமது திட்டத்திற்கு அமைச்சரவை முழுஆதரவு அளித்துள்ளது என்று பிரதமர் திரு. பெகின் மேற்படி ஆலோசனையின்பின் அறிவித்தார். (உ)

# முதல்வர் எம்.ஜி.ஆருக்கு மூப்பனர் பாராட்டு

சென்னை, ஜுலை 14

தமிழ்நாடு சட்டசபையில் மறைந்த கர்மவீரர் காமராஜரின் உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அறிவித்திருப்பது குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு. கருப்பையா மூப்பனர் அவருக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

கர்மவீரரது 75-வது பிறந்த தினம் கொண்டாடப்படும் வேளையில் சட்ட சபையில் அவரது உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்படுவது ஒருசிறப்பம்சமாகும் என்றும் திரு. எம்.ஜி.ஆரின் இவ்வறிவிப்பை ஆதரித்த அனைத்துக் கட்சிகளுக்கும் தாம் நன்றி தெரிவிப்பதாகவும் திரு மூப்பனர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

### திட்டம்

கொழும்பு, வியாழன்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாவது கட்ட வேலைகளுக்காக 72 கோடியே 80 லட்சம் ரூபா செலவிடப்படவிருக்கிறது. (இ)

தமிழ்நாடு சட்டசபை:

# ஒரே நாளில் நானகு உரிமைப் பிரச்னைகள்

சென்னை, ஜுலை 14

தமிழ்நாடு சட்டப் பேரவையில் இன்று 4 உரிமைமீறல் பிரேரணைகள் தாக்கல்செய்யப் பட்டன.

சபாநாயகரான திரு. முனு ஆதி தெரிவுசெய்யப்பட்டதை பாராட்டி தாம் பேசியதை வேறு கருத்துப்பட மெயில் பத்திரிகை தலையங்கம் தீட்டியிருப்பதாக முஸ்லிம் லீக் உறுப்பினர் லத்தீவ் ஒரு உரிமைமீறல் பிரச்னையைக் கிளப்பினர்.

முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சபையில்பேசிய பேச்சொன்றில் முரசொலி பத்திரிகை தனக்கு சாதகமான பகுதியை மாத்திரம் பிரசுரித்திருக்கிறதென்று அ. இ. அ. தி மு. உறுப்பினர் திரு. எஸ். ஆர். ராதா கூறினர். மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் உறுப்பினர் திரு. உமாநாத், மாலைமுரசு பத்திரிகை தி. மு. க. உறுப்பினர்களின் பேச்சுக்களை மாத்திரம் பிரசுரித்ததாக உரிமைப் பிரச்னை கிளப்பினர்.

இவைபற்றி பின்னர் தீர்ப்பளிப்பதாக சபாநாயகர் கூறினர்.

உள்ளூராட்சித்துறைஅமைச்சர் திரு. காளிமுத்து சேரணித் திட்டம் மீண்டும் கொண்டுவரப்படும் என்று நிருபர்களிடம் கூறியிருப்பதாகவும் சபை நடந்துகொண்டிருக்கையில் அங்குவெளியிடாமல் நிருபர்களிடம் வெளியிட்டது மூலம் சபை உரிமையை மீறியுள்ளார் என்றும் தி. மு. க. உறுப்பினர் சுப்பு பிரச்னை கிளப்பினர். இவைபற்றி தீர்ப்பு பின்னர் வெளியிடுவதாக சபாநாயகர் முனுஆதி அறிவித்தார்.

# எம். ஜி. ஆருக்கு ஜனதாகட்சி கோரிக்கை

## தி. மு. க. அரசின் தவறுகளை திருத்துங்கள்

சென்னை, ஜுலை 14

முன்னைய அரசுசெய்த தவறுகளைத் திருத்துங்கள் என்று தமிழ்நாடு முதல் அமைச்சர் எம். ஜி. ஆருக்கு ஜனதா கட்சி பிரமுகர் டாக்டர் எம். சந்தோஷம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர்வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

### பாகுபாடு வேண்டாம்

முதல் அமைச்சரும், மற்ற அமைச்சர்களும் தங்கள் ஆட்சிப்பணி அனைவருக்கும் உரியதென்றும், பொறுப்புணர்ச்சியில்தங்களுக்கு வாக்குஅளித்து ஆட்சியில் அமர்த்தியவர்களுக்கும் தங்களை எதிர்த்து வாக்களித்தவர்களுக்கும் எந்தவித பாகுபாடும் இல்லை என்று உணர்ந்து செயல்படுவார்கள் என்று நம்புகிறேன்.

### முதல் கடமை

சர்வாதிகார கொடுங்கோன்மை ஆட்சிக்குப்பின் முதல் முதலாக அரசுரிமை பெற்றவர்களுக்கு அதிகப்படியான சில முக்கிய பொறுப்புகள் உண்டு.

### பழையதவறுகளை திருத்துங்கள்

விதிமுறைகளைக் கையளாமல் தண்டிப்பது குடிமக்களின் உரிமைகளுக்கு விரோதமானது ஆகையால் பழைய உத்தரவுகளை ரத்துச்செய்து ஜனநாயக நாட்டில் வாழும் சுதந்திர குடிமக்களின் பூரண உரிமைகளை மீண்டும் அனைவருக்கும் வழங்க வேண்டியது புதிய அரசின் முதல் கடமையாகும்.

ஜனநாயக நாட்டில் கடந்த அரசின் தவறுகளை மாற்றி உத்தரவிடும் சக்தி மக்கள் அனுமதிபெற்று புதிதாக ஆட்சி ஏற்கும் அரசுக்கு உண்டே தவிர அத்தகைய மாற்றங்களை ஜனதிபதி ஆட்சி செய்யமுடியாது. (உ)

# அவசரகாலச்சட்ட அதிகாரங்களை இந்திய அரசு ரத்துச் செய்யும்!

புதுடில்லி, ஜுலை 14

அவசரகால சட்ட விதிகளில் உள்ள அதிகாரங்களை ரத்துச் செய்வதென பாரத அரசு முடிவுசெய்துள்ளது.

இத்தகவலை லோக்சபாவில் நேற்று உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் வெளியிட்டார்.

முன்னுள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் அரசாங்கத்தால் அவசரகால சட்டவிதிகள் அமுலாக்கப்பட்டிருந்தன. (உ)

### ஊர்வலம்

சென்னை, ஜுலை 14

முன்னுள் தி. மு. க. உறுப்பினர் திரு. லட்சுமணன் குன்றத்தூரில்வைத்துகாரணம் எதுவுமின்றிக் கைதுசெய்யப் பட்டுள்ளாராம்.

இது ஒரு பழிவாங்கல் நடவடிக்கை எனக்கூறப்படுகிறது. இதனை எதிர்த்து தி. மு. க. நேற்று மாபெரும் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடாத்தியது. (கி-உ)

# இயற்கை வளம் பற்றி ஆராய லண்டனில் மாநாடு

லண்டன், ஜுலை 14

இயற்கை வளங்களை ஆராயும் பொருட்டு லண்டனில் நடைபெறும் நிபுணர் குழு மாநாட்டில் இலங்கை உட்பட 36 அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் கலந்துகொள்கின்றன.


இம்மாநாடு ஆறு தினங்கள் நடைபெறும். மூன்ருவது மண்டல நாடுகளில் கிராமப்புற இயற்கைவளங்களை எவ்வாறு பயன்படுத்துவதுஎன்று ஆராய்வது இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப் பட்டது. (உ)

# அடுத்தாண்டு எண்ணெய் விலை உயரும்?

ஸ்டொக்ஹோம், ஜுலை 14

எண்ணெய் உற்பத்தி நாடுகளின் மந்திரிகள் கலந்துகொண்ட மாநாடு ஒன்று ஸ்டொக்ஹோமில் நடைபெற்றது.

அடுத்த ஆண்டில் எண்ணெய் விலை சிறிது கூடக்கூடுமென்று இம்மாநாட்டில் தெரிவிக்கப் பட்டது. (உ)



வேலர்: என்ரை மனிசி எனக்குத் தெரியாமல் சீட்டுப் பிடிச்சதெல்லாவற்றையும் கண்டுபிடிச்சிட்டன். ஆனல் ஒண்டைமட்டும் கண்டுபிடிக்கேலாது என்பதுதான் என் கவலை.

மயிலர்: என்னது சொல்லன்

வேலர்: ஆருக்கு வாக்குச்சீட்டுப் போடுவாள் என்பதை.

— சுந்தர்

# "கருணநிதி ஜோதிடம் பலிக்காது"

## அ.இ.அ. தி. மு. க. பிரமுகர்அறிக்கை

திருமங்கலம், ஜுலை 14

தி. மு. கழகத்தலைவர் கருணநிதி எம். ஜி. ஆர். ஆட்சியில் 6 மாதம் பொறுத்திருந்து பார்ப்போம் என்று கூறியிருப்பது சம்பந்தமாக திருமங்கலம் வட்டார அ. தி. மு. க. அமைப்பாளர் ஆனந்தன் ஓர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

'1967-ல் அண்ண முதல் அமைச்சரானபோது காங்கிரஸ் தலைவர் காமராஜர் இந்த ஆட்சி 6 மாதம்தான் இருக்கும். அதுவரை பொறுத்திருங்கள் என்று தெரிவித்திருந்தார்.

அந்த வசனத்தைத்தான் இப்போது கருணநிதி கூறியிருக்கிறர்.

6 மாதம் முடிந்தபின் கருணநிதி என்ன செய்யப்போகிறர் என்று தெரியவில்லை எம். ஜி. ஆரின் ஆட்சி தமிழ்நாட்டில் இதுவரை நடந்த ஆட்சிகளை விட முன்மாதிரியாக இருக்கப் போவதை 6வது மாதத்தில் கருணநிதி காணப்போகிறர். எம். ஜி. ஆரைப் பொறுத்தவரை கருணநிதி ஜோதிடம் பலிக்காது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### பாரத ரத்ன இனி இல்லை

புதுடில்லி, ஜுலை 14

பாரத ரத்ன, பாரத விபூஷண், பத்மபூஷண் போன்ற விருதுகள் ரத்துச்செய்யப்படுகின்றது ஏற்கனவே இப்பட்டங்களைப் பெற்றவர்களும் அவைகளை இனிப் பயன்படுத்தலாகாது.

லோகசபையில் பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் இதை இன்று அறிவித்தார்.

# தேர்தல் ஒழுங்குடன் நடைபெற ஏற்பாடு

## ஜெனரல் ஹக் அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஜுலை 14

பாகிஸ்தானின் எதிர்வரும் அக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் குறித்து நிபுணர் குழு ஒன்று ஆராய்ந்து வருவதாக இராணுவ அரசின் பிரதம நிர்வாகி ஜெனரல் ஷியால் உல் ஹக் நேற்று ராவல்பிண்டியில் வைத்துத் தெரிவித்தார்.

தேர்தல் ஒழுங்குடனும் கட்டுப்பாடு தளராமலும் நடைபெறுவதற்குரிய நகல் திட்டத்தை மேற்படி நிபுணர்குழு தயாரிப்பதில் ஈடுபடுள்ளது என்று ஜெனரல் ஹக் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் மேலும் கூறினர். (உ)

### ஆஸி.ஜனதிபதி ராஜினமா

லண்டன், ஜுலை 14

அவுஸ்திரேலிய மகா தேசாதிபதி சேர். ஜோன் கெர்ஸ் தமது பதவியை ராஜினமா செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஆனல் இச்செய்தி தவறனது என்று தேசாதிபதியின் செயலாளர் திரு. டேவிட் ஸ்மித் மறுப்புத் தெரிவித்துள்ளார் என்று கன்பாராவில் இருந்து வெளியான அறிக்கைகள் கூறுகின்றன.

இதேவேளை, தேசாதிபதி தமது ராஜினமா பற்றி இன்று அறிவிக்க விருக்கிறர் என்று மெல்பன் பத்திரிகையின் அரசியல் நிருபர் கூறியிருக்கிறர். (உ)

### வல்லரசுகள் ஜெனிவாவில் ஆலோசனை

ஜெனீவா, ஜுலை 14

அணு ஆயுத பரிசோதனைகளை முற்ருகத் தடைசெய்வது தொடர்பாக பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகள் கலந்துகொள்ளும் மாநாடு ஜெனீவாவில் ஆரம்பமாகியது. மேற்படி பேச்சுவார்த்தைகள் 14 வருடங்களாகத் தடைப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# தலையற்ற சிசுவின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

ஆனைக்கோட்டை, வியா

பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து தலையில்லாத சிசு ஒன்றின் அழுகிய சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பரபரப்பூட்டும் இச்சம்பவம் வட்டுக்கோட்டை மேற்கில் இடம் பெற்றது.

வட்டுக்கோட்டையில்உள்ள செல்லாச்சி என்பவரது வளவில் பாழடைந்த கிணற்றில் இருந்து இச்சடலம மீட்கப்பட்டது.

இவ்வீட்டில் எவரும் வசிப்பதில்லையாம்.

இச்சிசுவின் ஜனனத்தில் உள்ள மர்மம் என்ன? மரணம் சம்பவித்தது எப்படி? என்பன குறித்து சங்கானை பொலிசார் தீவிர புலன்விசாரணை மேற்கொண்டுள்ளனர். (உ)

# சைக்கிள் திருட்டு: சந்தேகநபருக்கு றிமாண்ட்

ஆனைக்கோட்டை, வியா

திருட்டுப்போனதாகக் கூறப்படும் சைக்கிள் மீட்கப்பட்டது.

கோப்பாயைச்சேர்ந்த இலகுநாதன் என்பரவது 300 ரூபா பெறுமதிமிக்க சைக்கிள் திருட்டுப் போய்விட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டிருந்தது.

இச்சைக்கிளை சார்ஜன்ட் ஐயாத்துரை மானிப்பாயில் வைத்துக்கைப்பற்றினர்.

இது தொடர்பாகக்கைதான ஜெயலோகநாதன் என்ற சந்தேகநபர், யாழ். நீதிபதி திரு. கே. வி நவரத்தினத்தின் உத்தரவின்பேரில் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். [உ]

# பிணையில் சந்தேக நபர்

ஆனைக்கோட்டை, வியா

திருநெல்வேலி அரசினர் தோட்டத்தில் இரவு நேரத்தில் கத்தரிக்காய் திருடியதாக கோப்பாய் பொலிஸ் சார்ஜன்ட் எஸ். எம். ஐயாத்துரை சந்தேகத்தின் பேரில் கோண்டாவிலைச் சேர்ந்த கு. ஜெயரத்தினம் என்பவரைக் கைது செய்து யாழ். நீதவான் திரு. கே.வி. நவரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்தார்.

பிணையில் செல்ல சந்தேகநபர் அனுமதிக்கப்பட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (உ)

# செக். நாட்டில் பயிற்சி

கொழும்பு, வியா

இலங்கை மட்பாண்டக்கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த 40 ஊழியர் அடங்கிய குழு ஒன்று ஒருவருட பயிற்சியை மேற்கொண்டுஅடுத்த ஞாயிறுக்கிழமை செக்கோச்லேவியா செல்லவிருக்கிறது. கடந்தவருடம் இருநாடுகளும் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இக்குழு அங்கு செல்கிறது.

மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தைச்சேர்ந்த ஊழியர்கள் புலமைப் பரிசில் பெற்றுவெளிநாட்டுக்கு பயிற்சி மேற்கொண்டு செல்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# காணிப் பங்கீட்டுமுறையை மாற்றுக!

## உலக தொழிற்சங்கம் வற்புறுத்தல்

கொழும்பு,வியா.

காணிப் பங்கீட்டுக் கொள்கையை திருத்தியமைக்குமாறு சுதந்திர தொழிற்சங்கங்களின் அனைத்துலக சம்மேளனம் (ஐ சி.எஃப்.ரி.யு) இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை சீரமைக்கும் வகையிலும் அரசாங்க கொள்கைகளிலிருந்து நாடற்ற மக்கள் சமஅளவில் பயன்பெறவும் அவர்களின் தனித்துவமன கலாசாரத்தைப் பேணிக்கொள்ளும் வகையில் முழு உரிமைகளும் பாதுகாப்புகளும் கொடுக்கவேண்டுமென்றும் மேற்படி சம்மேளம் இலங்கை அரசைக் கோரியிருக்கின்றது. கடந்த மாதம் ரோம் நகரில் நடந்த சம்மேளன மகாநாட்டில் இது தொடர்பான தீர்மான ஒன்று நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் இப்பொழுது இலங்கைப்பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

## கூப்பன் யாருடையது?

யாழ். கொட்டடி சிவன் பண்ணை வீதியில் எஸ். வில்வேந்திரா, கே. சோதிநாதன் என்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களால் கண்டெடுக்கப்பட்ட 6 கூப்பன்களுடன் கூடியபை ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் சான்றுகாட்டி கூப்பன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

யாழ். டாக்ஸி சாரதியான திரு. சுப்பிரமணியத்தினல் தமது டாக்ஸிக்குள் (EL 408) கண்டெடுக்கப்பட்ட கூப்பன் ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

# வேலைக்காரியாக வேஷமிட்டு திருட்டு!

கொழும்பு, வியா

வேலைக்காரி வேஷம்போட்டு திருட்டுக்கள் நடத்துவதைத் தொழிலாகக் கொண்டவர் என நம்பப்படும் 30 வயது நிரம்பிய பெண் ஒருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

இரத்தினபுரியைப் பிறப்பிடமாகக் கொண்ட இப்பெண்ணின் பெயர் ஸ்வர்ணலதா அல்லது கருணவதி என்பதாகும்.

வேலைக்காரியாக வீடுகளில் சேரும் இவர், தருணம் பார்த்து வீட்டிலுள்ள பொருட்களைத் திருடிக்கொண்டு மறைந்துவிடுவாராம்.

'வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டுள்ள இப்பெண்ணைக் கைது செய்ய, உதவியாகத் தகவல் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும் என பொலிசார் அறிவித்துள்ளனர். (உ)

# குடும்பத்துக்கு 6 தீப்பெட்டிகள்

கொழும்பு, வியாழன்

நாட்டில் நிலவும் தீப்பெட்டித் தட்டுப்பாட்டை நீக்க வர்த்தக அமைச்சு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக குடும்பத்துக்கு 6 தீப்பெட்டிகள் வீதம் விநியோகிக்கப்படும். (உ)

# தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் (ஆங்கில) மட மாணவிகள் நேற்றுத் தமிழ்த்தின விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

தமிழ் நாகரிகப் பாணியில் சேலை அணிந்து கூந்தலில் மலர்சூடி மாணவிகள் அனைவரும் இவ்விழாவில் பங்குபற்றினர். கவிதை- கட்டுரை-நாடகப்போட்டிகளும் இடம் பெற்றன. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிரதம விருந்தினராகக் கலந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தார். (கி. அ)

# "கொழும்புத்துறை

# வாலிபர், வனிதையர் வாழ்விலும் ஒளியேற்றுவேன்"

## ஏபிரகாம் உறுதி

யாழ்ப்பாணம்,வெள்ளி

'யாழ்ப்பாணத் தொகுதியில் கொழும்புத்துறைப்பகுதி அபிவிருத்தியில் பின்தங்கிஉள்ள இடமாகும். கடற்றொழில் சம்பந்தமான அபிவிருத்தியை இப்பகுதியில் மேற்கொள்ள முடியும நான் ஆட்சிமன்றம் சென்ருல் இதில் முக்கிய கவனம செலுத்துவேன்.''

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதி சுயேச்சை வேட்பாளர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாமை ஆதரித்து கொழும்புத்துறை 3-ம் குறுக்குத்தெருவில் திரு. கே பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் டாக்டர் ஏபிரகாம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் "நான் வெல்லும்போது இப்பகுதியில் முக்கியமாக தும்புத் தொழிற்சாலை யொன்றை நிறுவி இங்கு வாழ்கின்றவாலிபர் வனிதையர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவேன். சாதி, சமய, கட்சிவேறுபாடின்றி சகலருக்கும் சேவை செய்வேன்''என்ருர்.

ஈச்சமோட்டை திரு. எஸ் பாலசிங்கம் பேசுகையில் ''டாக்டர் ஏபிரகாம் இதய சுத்தியுடன் சமூக சேவையில் ஈடுபடும் ஒரு சிறந்தமனிதரென்றும், யாழ்ப்பாணத்திலே பிறந்து, யாழ்ப்பணத்திலே வளர்ந்து. யாழ். மக்களுடன் ஒன்றி வாழ்ந்து, அவர்கள் சுகதுக்கங்களில் பங்குபற்றி வருபவரென்றும், அவருக்கு இடப்படும் வாக்குகள் சேவைக்கும் நேர்மைக்கும் இடப்படும் வாக்குகள்'' எனக்கூறினர்.

திரு.செபஸ்ரியன் கே.சாந்தலிங்கம் ஆகியோரும்பேசினர்.

# கொரியா கப்பல் ஊழியர் நடு வீதியில் மோதல்

## கொழும்புக் கோட்டையில் சம்பவம்

கொழும்பு, வியா.

கோட்டை சதாம்வீதியில் கொரியகப்பல் சிப்பந்திகள் ஏழுபேருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 5பேரை கோட்டைப் பொலிஸார் கைது செய்து கொரியகப்பல் தளபதியிடம் ஒப்படைத்துள்ளனர்.

நடுவீதியில் பகல் வேளையில் இவர்கள் மோதிக் கொண்டதில் சில கடைகளின் கண்ணுடி அலுமாரிகள் நொறுக்கப்பட்டதாகத் தெரிகிறது. பெரும் பரபரப்பை இது ஏற்படுத்தியது.

பொதுமக்களும் இவர்களின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். சேதமுற்ற கடைகளுக்கு நஷ்டம் வழங்கும்படி கொரிய கப்பல் தளபதியைப் பொலிசார் கோரியுள்ளனர். (ம)


## விளம்பரம

ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

பதவி வெற்றிடம்

பொதுமுகாமையாளர் தரம் III

மேற்படி பதவிக்கு கீழ்க்காட்டப்பட்டுள்ள தகைமைகளை உடைய இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயது:

25 வயதுக்கு மேற்பட்டவர்களாயிருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகள்:

விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் உடையவர்களாக இருத்தல்வேண்டும்.

1. கூட்டுறவுப் பயிற்சி பெற்றுள்ள பட்டதாரி அல்லது

2, மூன்றுவருடகால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர் தராதரப்பத்திரம் பெற்றவராயிருத்தல் வேண்டும் அல்லது

3. 5 வருட கால அனுபவம் பொருந்திய முன்னை நாள் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது

4 ரூபா 20,000 00 இனை வருடாந்த மொத்த விற்பனையாகக் கொண்ட வியாபாரத்தாபனமொன்றில் மேல்முகாமைப் பதவி ஒன்றில் மூன்று வருடகால அனுபவமுடைய ஒருவர்.

கல்வித்தகைமை தராதரப்பத்திர சான்றிதழ்கள், பிறப்புப் பதிவுச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திர சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

பிணை;

உரொக்கம் ரூபா 1000/- உறுதிப் பிணை ரூபா 5000/-

சம்பள விகிதம்:

340—590

15×10, 20×5

குறிப்பு:

உரிய மேலதிகப் படிகளும் வழங்கப்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி இயக்குநர்சபை தீர்மானிக்கும் குறிப்பிட்ட காலத்துக்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர். இக்காலத்தில் ரூபா 320/- மட்டும் அலவன்சாக வழங்கப்படும்.

விண்ணப்பம்:

சொந்தக்கையெழுத்தில் விபரமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர், ஊர்காவற்றுறை கட. தொ. கூட்டுறவுச் சங்கம், ஊர்காவற்றுறை என்ற முகவரிக்கு 22-7-77 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல்வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொதுமுகாமையாளர் பதவி'' என எழுதப்படவேண்டும்.

பொதுமுகாமையாளர்,

ஊர்காவற்றுறை கட. தொ. கூ. சங்கம்,

ஊர்காவற்றுறை.

6652



## கோட்டு விற்பனவு

மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

சுப்பையா பத்மநாதன், குப்பிளான்.

—வழக்காளி

இல: எம். எஸ்/32.

எதிராக

கனகரெத்தினம் ஜெயநாதன், அம்மன்ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற இல: எம். எஸ். 32ம் வழக்கில் எனக்குக் கிடைத்த வெலியாத்துக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனத்தை 1977ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி (10-08-1977) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 7250/ம் இன்னும் ரூபாய் 5000/-க்கு 26-2-1974 தொடக்கம் 6-6-1975 வரையும் வருடமொன்றுக்கு 24% வட்டியும் இருவகையும் கூட்டிய தொகைக்கு 6-6-1975 திகதியில் இருந்து. முழுத்தொகைக்கும் இறுபடும்வரையும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வட்டியும் இவ்வழக்குச் செலவு ரூபாய் 576-57½. (இதில் நடைபெற்ற செலவு ரூபாய் 300 - 42½ நடைபெற வேண்டிய செலவு ரூபாய் 133-37½ மேலதிகச் சமயாசமயச்செலவு ரூபாய் 142-77½)

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணர்பண்ணை வடகிழக்கு இறை "கம்பன்வயல்'' நில. பர. 3. மூன்று இதில் கிழக்குப் பக்கமாய் நிலப்பரப்பு இரண்டு இந்த நிலப்பரப்பு இரண்டிற்கும் எல்லை கிழக்கு காசிநாதன் கணபதிப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் பங்காளிகளுக்குமுரிய ஆதனம். வடக்கு வாய்க்கால். மேற்கு இதன் மிகுதி ஆதனம். தெற்கு கணபதிப்பிள்ளை ஆறுமகத்திற்கும் பெண் செல்வரத்தினத்திற்குமுரிய ஆதனம். இதனடங்கலிற் சொரியலாக அரைவாசியும் மேற்கெல்லைக்காணியின் தெற்கெல்லை அருகால் அதன் தெற்கெல்லைப்பாதை முகப்பிற்கு போக்குவரத்துச் செய்யும் உரித்தும். (முழுக்காணி மூன்று பரப்பின் முற்பதிவு டி 395/168)

(ஒப்பம்)

கா. கணபதிப்பிள்ளை,

பிஸ்கால்/பதிவாளர்.

யாழ் மேல் நீதிமன்றம்.

6651

## வரி விளம்பரம்

### தேவை

தையல் வேலைகளில் அனுபவமும் நிலையத்தை நடத்தக்கூடிய பெண் ஊழியர் உடனே தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். தங்க இடவசதியும் அளிக்கப்படும். மனேஜர், கே.எஸ்.எம். இன்டஸ்றீஸ், தையல் நிலையம், வலந்தலே, காரைநகர். 6632

யாழ். மாவட்டத்தில் G. C. E. O/L, H. N. C. E. வகுப்புகளுக்குத் தமிழ் படிப்பிக்கக்கூடிய ஆசிரியர் ஒருவருக்கு ரியூட்டரிகளில் அல்லது வீடுகளில் மாணவர்கள் தேவை. விபரங்களுக்குக் கடித மூலம் தொடர்புகொள்ளவும்: சி. வை. நாதன், No. 13 1/3, ஸ்ரான்லி கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6650

### விற்பனைக்கு

பருத்தித்துறை ''மூர்க்கத்தடி'' எனக்கூறப்படும் கடற்கரை பிரதான வீதியில் மின்சாரம், குழாய்நீர் வசதிகளுடன் காணிப்பரப்பு 32 லாச்சம் கொண்ட பல அறைகள் அடங்கிய பெரியவீடும், தென்னந்தோட்டமும் உள்ளவளவு பற்றிய விபரம் வேண்டியோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். மாகாணத் தலைவி, மாகாண இல்லம், தபாற்பெட்டி இல 65, தி. கு. கன்னியர்மடம், யாழ்ப்பாணம். 6654

தெல்லிப்பழை பன்னாலை வீதி மகாஜனக் கல்லூரிக்கும், யூனியன் கல்லூரிக்கும் இடையே சிறு வீடு வளவு கிணற்று வசதியுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு வ. மாணிக்கவேல், வான் அளவைப் பகுதி, நில அளவைத் திணைக்களம், கொழும்பு 5 6642

### பயிற்சி

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-1977 ல் ஆரம்பமாகவுள்ளது. நிச்சயமான வேலை வாய்ப்பைத் தரக்கூடிய விதத்தில் பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் பல வழிகளில் பயனடைவீர்கள் என்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம். அதிபர், இன்ஸ்டிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11/B ஸ்ரான்லி வீதி, மொம்சாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 6635

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# ''மொழி, இனப்பிரச்னைகளை முதலாளித்துவம் தீர்க்காது''

யாழ்ப்பாணம், வெள்ளி

''இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்நாட்டு மக்களது சகல பிரச்னைகளையும் தீர்ப்பதற்கான வழிவகைகள் கூறப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில்தான் நானும் இடதுசாரி முன்னணியின் ஒவ்வொரு வேட்பாளரும் போட்டியிடுகிறோம்'' என்று கோப்பாய்த் தொகுதி இடதுசாரி ஐக்கிய முன்னணி வேட்பாளரை ஆதரித்து உரும்பராய் கிழக்கு புனித மைக்கேல் சனசமூக நிலையத்தில் உரும்பராய் பங்குக்குரவர் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் வேட்பாளர் திரு.வ.நடராசா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்; ''இடதுசாரி முன்னணி நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றுமாயின் இந்நாட்டை முன்னேற்றப் பாதைக்குக்கொண்டு செல்வோம். முழுமையான நாட்டைப் பேணி தமிழ் மக்களது பிரச்னைகளையும் தீர்த்து வைப்போம்.

திரு.கே. தவஞானம் பேசுகையில், ''இந்த நாட்டில் நான்கு பெரும் கட்சிகள் தேர்தலில் பங்கெடுக்கின்றன. இவற்றுள் மூன்று அணிகள் யூ.என் பி, ஸ்ரீ.ல.சு.க. தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன முதலாளித்துவக் கொள்கையுடையன. இவைகளினால் இந்த நாட்டில் வளர்ந்துள்ள பூதாகரமான வேலையில்லாப் பிரச்னை பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது'' என்று குறிப்பிட்டார்.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைப் பொதுக் காரியதரிசி திரு.பி. ஜே. அன்ரனி பேசுகையில் ''திரு.நடராசா சாதியைச் சொல்லி வாக்குக் கேட்க வரவில்லை. முற்போக்குக்கொள்கையின் அடிப்படையில் இந்த நாட்டில் வாழும் தமிழ் சிங்கள மக்களது சகல பிரச்னைகளையும் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையில் போட்டியிடுகின்றார்'' என்றார்.

''முதலாளித்துவ சமுதாய அமைப்பில் இனப்பிரச்னையோ மொழிப்பிரச்னையோ சாதிப் பிரச்னையோ எந்தவித பிரச்னையும் தீர்க்கப்படமாட்டாது. சிறுபான்மைத் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் கல்விப் பிரச்னை பொருளாதாரப் பிரச்னை, வேலையில்லாப்பிரச்னை விடில்லாப்பிரச்னை என்பன பூதாகரமாக உள்ளன. இவற்றை முதலாளித்துவக் கட்சிகளால்தீர்க்கமுடியாது.''

திரு.எஸ்.நடராசாஉட்படப் பலர் பேசினர். (கூ-அ)

## இன்றைய உற்சவம்

வண்ணை சிவன்கோவிலில் இன்று சப்பரத் திருவிழாவாகும். 5-ம் திருவிழாவான இன்று பகல் திருவிழா காலை 9 மணிக்கு நடைபெறும். மாலை 6 மணி முதல் 7-30 மணிவரை தமிழ்மணி எஸ். கணேசசுந்தரத்தின் பண்ணிசைக்கச்சேரியும் வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலய மாணவிகளின் பண்ணிசை விருந்தும் நடைபெறும் 7-30 மணிக்கு வசந்தமண்டப பூசையும் அம்பாள் இடப வாகனத்தில் சப்பரத்தில் வீதி வலம் வருதலும் நிகழும். (அ)


## விசேட ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சிப் பட்டணம்

### கேள்வி அறிவித்தல்

கீழ்க் காணும் வேலைசெய்து முடிப்பதற்கு சீல்வைக்கப்பட்ட கேள்விகள் 26-07-1977ந் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் ஒவ்வொன்றும், கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/ ம் திருப்பிப் பெறக்கூடிய கேள்வி வைப்புப் பணம் ரூபா 100/-ம் கட்டிய தின்பேரில் 25-07-1977ந்திகதி நண்பகல் 12 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கேள்வி-1977' என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கும் உரிமை விசேட ஆணையாளருக்கு உண்டு.

கேள்விகள் யாவும் விசேட ஆணையாளர், கிளிநொச்சிப் பட்டணம், கிளிநொச்சி என்ற முகவரிக்கே அனுப்பப்பட வேண்டும். தனிப்பட்ட அதிகாரிகள் எவருக்கும் அனுப்புதல்கூடாது.

மேலும் விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நாட்களில் மாலை 3-00 மணிக்கு முன் பெற்றுக்கொள்ளலாம்.

### வேலை விபரம்

1. குமாரசாமி வீதி, கிளிநொச்சி.

பி.எல். பேர்ட்டி சில்வா
விசேட ஆணையாளர்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி.

12-07-1977. 665



நல்லூர்த்தொகுதி கூட்டணிவேட்பாளர்
**திரு. மு. சிவசிதம்பரத்தை**
ஆதரித்து
இன்று நடைபெறும்
**மாபெரும்கூட்டம்**
இடம்: நல்லூர் கல்யாணமண்டப அருகாமையிலுள்ள மைதானம்.
பிரமாண்டமான சிகரத்தின் 2-வது மாடியில் அமைந்துள்ள மேடையில் பேச்சாளர்கள் உரை நிகழ்த்துவர். 6656

**சிந்தெட்டிக் கற்பூரம்**
பெட்டிகளில்
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516, ஸ்கின்னர்ஸ் றேட்டுத் தெற்கு,
கொழும்பு - 10
போன்: 24261-5

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-மஞ்சுளா
அன்பே ஆருயிரே

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவகுமார் - ஜெயசுதா
பட்டிக்காட்டு ராஜா

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன் லதா
வீட்டுக்கு வந்த மருமகள்

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஜெய்சித்ரா
**தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ** போன்: 7693 (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்—சுஜாதா
**நீ ஒரு மகாராணி**

**சாந்தி** யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, ஜெமினி, சாவித்திரி
**கப்பலோட்டியதமிழன்** (புதிய பிரதி)
நிதியுதவிக்காட்சிகள் (யாழ்/மத்தியகல்லூரி செயல்திட்டம்)
15-7-77 பி. ப. 2-30ம், மாலை 6-30ம் மட்டும்.
சிவாஜி, சாவித்திரி, எம். ஆர். ராதா
**கை கொடுத்த தெய்வம்**

மகத்தான 2-வது மாதம்
**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
நடித்த
ஸ்ரீதரின் **வைரநெஞ்சம்**
(ஈஸ்ட்மன் கலர்)

72-வது நாள்
**ராணி** (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
**நாளை நமதே**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ்நகர்) போன்: 7180
69-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
தேவரின் **திருவருள்** (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

**REGAL** (JAFFNA)
Daily: at 4-45, 7-00 & 9-30 p. m. only
ROBERT LOUIS STEVENSON'S CLASSIC
**TREASURE IsLAND**
(Color)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன்-சௌகார்ஜானகி
**ஆலயம்**
வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர் - லதா நடித்த
**உழைக்கும் கரங்கள்**

**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
**SECRET AGENT OSS 117**
(Clour)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த
ஜெயேந்திரா மூவீஸ்
**காத்திருப்பேன் உனக்காக**

# ஈழநாடு

The EELANADU

## "இந்தஅரசை பெண்களே முன்னின்றுதோற்கடிப்பர்"

### மானிப்பாய் ஐ.தே.க.வேட்பாளர் உரை

யாழ்ப்பாணம், வெள்ளி

"ஐக்கியதேசியக்கட்சி ஆட்சியில் இன, மொழி, சாதி பேதத்துக்குஇடமில்லை. எல்லா மக்களும் இணைந்து சமத்துவமாக வாழலாம். சிறுபான்மையினர் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற நிலையையும் முற்ருக மாற்றுவோம். இந்நாடு ஒரு இனத்தவருக்கோ ஒரு மொழி பேசுபவருக்கோ உரித்தானதல்ல. தமிழ்-சிங்கள முஸ்லிம் மக்கள் எல்லோருக்கும் உரித்தான ஒரு நாடாகும். நாம் எல்லா இன, மொழி, சாதி மக்களையும் ஒரே மாதிரித்தான் நோக்குகின்ருேம். நாம் பதவிக்கு வந்ததும் இன, மத, மொழி, பிரதேச பாகுபாட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். இன்று சிறுபான்மையினராக ஒதுக்கி இரண்டாவது இடத்துக்கு வைக்கப்பட்டுள்ள தமிழ்ப்பேசும் மக்கள் எமது ஆட்சியில்சமத்துவமாகக் கணிக்கப்படுவார்கள்" என்று ஐ. தே கட்சி மானிப்பாய்த் தொகுதி வேட்பாளர் திரு. எஸ். அலோசியஸ் ஆனைக்கோட்டையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கருத்தரங்கொன்றில் பேசும்போது கூறினர். இக்கருத்தரங்கு ஐ. தே. க. கிளைத் தலைவர் பி. பி. நாதன் தலைமையில் நடைபெற்றது. திரு அலோசியஸ் மேலும் கூறியதாவது:

"ஏழாண்டு காலம் குசினிகளைக் காலியாகக்கிடக்கவைத்தது இந்த அரசு. பிள்ளைகளுக்கு பாலுணவு இல்லாமல் கஷ்டப்படவைத்தது இந்த அரசாங்கம். விலைவாசிகளை உயரவிட்டுப் பெண்களைச் சொல்லமுடியாத வேதனைத்தியில் தள்ளி வேகவைத்தது இந்த அரசாங்கம். ஆதலால் பெண்களே முன்னின்று இந்த அரசை இம்முறை தோற்கடிப்பார்கள். அமெரிக்க- சின- வட கொரிய பச்சை அரிசியை மக்களுக்கு வழங்கிவரும் அரசாங்கம்- அதேசமயம்உணவுஉற்பத்தியில் பெரும்சாதனையை மேற்கொண்டுள்ளதாகப் பெருமை பேசிக்கொள்கிறது. 1970-ல் சுதந்திரக்கட்சி வாழ்க்கைச் செலவைக் குறைப்பதாகவும், அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைப்பதாகவும் வாக்குறுதி அளித்துள்ளபோதிலும், இன்று அத்தியாவசிய பொருட்களை ஏழை மக்களின் கைகளுக்கு எட்டாத அளவுக்கு விலை உயர்ந்துள்ளது"

திரு. ஸ்ரீபதிநாதனும் பேசினர். (அ)

## 'தமிழினம்தமது உரிமைகளை இழந்துகொண்டேபோகிறது'

யாழ்ப்பாணம், வெள்ளி

"தமிழ் இனத்தின் வரலாற்றின் தற்போதைய நிலை நெருக்கடியானதாக இருக்கின்றது பல அரசாங்கங்கள் எம்மினத்தைத் தாக்கி, ஓரவஞ்சனை செய்து வருவதோடு நாமும் எம்மினத்தின் தற்போதைய பின்தங்கிய நிலைக்கு எமது செயல்களால் காரணகர்த்தாக்களாக இருக்கின்ருேம். 'உரிமைகளுக்கு போராடுகின்ருேம்' என்று தேர்தலுக்கு தேர்தல் ஆட்சி மன்றம் சென்ற பிரதிநிதிகள் கூறிவந்தார்களே அல்லாமல் செயல் முறையில் ஒரு உரிமையைத் தன்னும் மீட்டெடுக்கவில்லையே. இருக்கின்ற உரிமைகளை இழந்து கொண்டு போகின்ருேமே தவிர இழந்தவற்றை மீட்டெடுக்கவில்லை"

இவ்வாறு தமிழ் மக்கள் இயக்கத்தின் தலைவரும் ஊர்காவற்றுறை தொகுதியின்வேட்பாளருமானதிரு.யோகேந்திரா துரைசுவாமி புங்குடுதீவு மேற்கில் நடந்த கருத்தரங்கில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது;

"தற்போதைய சீர்கேடான நிலையை ஆராய்ந்து ஒரு சில தமிழ் மக்கள்கூடி, தமிழ் மக்கள் இயக்கத்தை ஆரம்பித்தோம். இழந்த உரிமைகளை மீட்டெடுப்பதற்கும் எங்களைப் பலப்படுத்துவதற்கும் திட்டங்கள் அமைத்துள்ளோம். ஓரிரு நாட்களில் சாதிக்கக் கூடிய திட்டங்கள் அல்ல. படிப்படியாக செய்முறையில் இவற்றை நடத்தி வந்தோமாஞல் எமது இனம் உரிமைகளைப் பெற்றெடுக்கும் என்பதில் ஐயமில்லை"

திரு. மு. தில்லைநாதன் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினர்.

வைத்தியர் குணரத்தினசிங்கம், குழந்தைவேலு. ஆசிரியை ஐஸ்வரி, வி.சோமஸ்கந்தன், திருமதி கணேஷன் மாணிக்கவாசகர், குணபதி துரையப்பா ஆகியோரும் இக்கருத்தரங்கில் பங்குபற்றினர்கள். (இ)

### தந்தை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பின்னர் தனது 46வது வயதில் யாழ்ப்பாணத் தொகுதியிலி பல இன மத மக்கள் வாழ்வதாலும், பல்வேறு தொழில் செய்பவர்களாக இருப்பதாலும் தமது பேரவையை மக்கள் சமூகம் அனைத்திற்கும் வழங்கும் முகமாக போட்டியிட்டார். இந்தத்தொகுதி மக்களின் ஒத்துழைப்புப் நல்லாதரவும் வேண்டியே அவர் இத்தொகுதிர்கு வந்தார். 48 வயதில் மந்திரியாகப் பதவியேற்ற அவர் விசேஷமாக தனது தொகுதி மக்கள் பல்வேறு தொழில் செய்பவராக இருந்தபடியால் கடற்தொழில் கைத்தொழில் மந்திரியாக வந்து யாழ். தொகுதிக்கு மட்டுமல்லாமல் தமிழர்வாழும் பிரதேசங்களினதும் பொருளாதார நலனுக்காகப் பாடு பட்டார்.

"யாழ்ப்பாண மக்கள் தாங்கள் வாக்களிக்குமுன் தங்கள் நிலையை முதலில்உணர வேண்டும். வேலைவாய்ப்பின்மை, வீட்டு வசதியின்மை, சுகாதாரக் கேடுகளால் கஷ்டப்படும் மக்கள் அவற்றிலிருந்து நிவாரணம் பெறமுயலுதல் வேண்டும்.

## விடுதலே—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெஞ்சிறைகளில் வேதனையுற்றனர். நாம் பட்ட அந்த வேதனைகளை வீணுகவிடாது காப்பது தமிழ் மக்களின் கடமை என்ருர்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்து யாழ். வளாக மாணவர் திரு. தர்மராசா தனது உரையில் கூறியதாவது:

நாம் இழந்த நாட்டை மீட்கவே போராடுகின்ருேம். எமது பிரதேசங்கள் குடியேற்றங்கள் மூலம் பறிக்கப்பட்டுள்ளன. இப்பேரபாயத்தில் யாம் மீள நம் நாடு முழுவதும் சிங்களமயமாக்கப்படுவதற்குள் நாம் பூரண இறைமை உள்ள தன்னுதிக்க தமிழீழக் குடியரசை அமைக்கவேண்டும. அரசியல் சுதந்திரம் - பொருளாதார விடுதலை - சகோதரத்துவ விடுதலை ஆகிய மூன்றையும் ஏககாலத்தில் நாம் பெறவேண்டும்.

### யோகேஸ்வரன் பதில்

யாழ்ப்பாணத் தொகுதி வேட்பாளர் திரு. வெற்றிவேலுயோகேஸ்வரன் பேசுகையில்கூறியதாவது:

"செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காகவே யாழ்ப்பாணத்தொகுதியை திரு. அமிர்தலிங்கம் எனக்குக் கொடுத்ததாக அண்மையில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றில் அப்பட்டமான பொய் ஒன்று கூறப்பட்டுள்ளது.

நான் அரசியலில் முழுவேகத்துடன் இயங்கிய காரணத்தாலேயே எனக்கு இத்தொகுதி ஒதுக்கப்பட்டது. லண்டனில் இரு இலங்கைப் பிரதமர்களுக்கு எதிராக தமிழ் மக்கள் பிரச்னையை உலகுக்கு எடுத்துக்காட்ட எனது தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களை தமிழ் மக்கள் அறிவர். அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு தமிழர் பிரச்னையிலும் நான் முன்னின்று தமிழ் இனத்திற்காக அல்லும் பகலும் பாடுபட்டிருக்கின்றேன். இவ்வாறு நான் அரசியலில் முழுவேகத்துடன் இயங்கியதினுலேயே எனக்கு இத்தொகுதி ஒதுக்கப்பட்டதேயன்றி வேறு எந்தத் தனிப்பட்ட காரணத்திற்காகவுமல்ல.

யாழ். கூட்டணிவேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரன்மட்டுமே மேடைக்கு அழைக்கப்பட்டிருந்தார். அவர் மேடைக்கு வந்ததும், மலர் மாலைகள் மலைபோல் குவிக்கப்பட்டு. நெற்றியில் திலகமும் இடப்பட்டு, வெற்றி வாழ்த்துக்கள் கூறப்பட்டன மேடையில் அவர் அமர்ந்ததும், மக்களின் கரகோஷம் பல நிமிட நேரம் வரை நீடித்தது! (கி-இ)

யாழ்ப்பாணம் இஸ்லாமிய சோஷலிச முன்னணித்தலைவர் ஜனுப் எஸ்.எம். மீரான்சாகிப் பேசுகையில்:

"முஸ்லிம் மக்கள் இந்த நாட்டின் மூன்ருவது தேசிய இனம். பிரிவினை அவர்களது பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது. முற்போக்கு அணியைச்சேர்ந்த நாம் இன்று குமார் பொன்னம்பலத்தை ஏன் ஆதரிக்கின்ருேம் என்ருல், பிரிவினைக்கு எதிரான அம்சத்தினுலாகும்" எனருர்.

திருவாளர்கள்; ஜோ. வீரசிங்கம், ஜே. பீ, ரி. கே.இராசரத்தினம், எஸ். சொல்வேந்தன், ஆர். ஈ. ஆனந்தராசா, "புதுமைலோலன்", திருமதி பொன்மணி அந்தோனியா சாமிநாதர், ஜனுப்கள் ஏ அன்வர், நூர்முகமது ஆகியோர் உட்படப்பலர் உரையாற்றினர்.

## 'எம்.பி.யானுல் வாலிபர்க்கு வேலைவாய்ப்பளிப்பேன்'

கொடிகாமம், வியாழன்

"சாவகச்சேரித் தொகுதியில் இருக்கும் வேலையற்ற வாலிபர்களின் பிரச்னை ஓர் முக்கிய விடயமாக உள்ளது. படித்துபட்டம் பெற்றவர்களை யுவதிகளையும் வேலையற்றவர்களாகத் திரிய விடாமல், அவர்களிற்குத் தகுந்த வேலைவசதியைக் கொடுத்து வாழவைக்க வேண்டும். எதிர்வரும் தேர்தலில் நான் வெற்றியீட்டினுல் 10,000 வாலிபர்கட்கு வேலை வசதி செய்து கொடுப்பேன்"

இவ்வாறு சாவகச்சேரி கோயில் குடியிருப்பில் அ பரமசாமி தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் சாவகச்சேரி ஜி.ஜி.காங்கிரஸ் வேட்பாளரான வே. குமாரசுவாமி கூறினர்.

திரு.குமாரசுவாமி தொடர்ந்து கூறியதாவது:

ஒரு பிரதிநிதி பாராளுமன்றம் செல்வது மக்களின் நலனுக்காகவே. பரந்து பட்டு வனங்களாக இருக்கும் காடுகளைக் களனிகள் ஆக்கவேண்டும். நிலத்திற்குக் கீழே இருக்கும் தண்ணீரை குழாய்கள் மூலம் மேலே கொண்டுவர வேண்டும். செயற்கை மழையை பெய்யச் செய்யவேண்டும். ஆறுகளை நீரில்லாத பிரதேசங்களிற்குத் திருப்பி நீர்ப்பாச்சலை ஏற்படுத்துவதோடு, உப்புநீரை நல்ல தண்ணீராக்கி அதிலிருந்து மக்களை, பஞ்சம்,பசி, பட்டினியிலிருந்து காப்பாற்றுவதேஎன்நோக்கமாகும்.

திருவாளர்கள்; ம.கந்தசாமி வி. தியாகராசா ஏ. தில்லைநாதன் ஆகியோரும் பேசினர்

## அடுத்த தேர்தலின் முன்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முன்பு தேர்தலில் அந்தக்கட்சியின் இருஅபேட்சகர்கள் நியமிக்கப் பெற்று அவர்கள் வெற்றிபெறவேண்டும். அடுத்த தேர்தலில் இந்த நிபந்தனையைப் பொறுத்தவரையில் தமிழரசுக்கும் தமிழ்க்காங்கிரசிற்கும் எவ்விதவித்தியாசமுமில்லை தமிழரசு ஒரே ஒரு அபேட்சகரைத்தான் நிறுத்தியுள்ளது. ஆகையினுல் அடுத்த தேர்தலில் இரண்டு கட்சிகளும் அங்கீகாரம் பெற்ற கட்சிகளாகப்பாவிக்கப்படமாட்டா.

### தனித்து இயங்கலாம்

(2) குறிப்பிட்டதேர்தலுக்கு முன்பு அந்தக்கட்சியின் சார்பில் ஒருவரையாவது நியமித்திருக்கவேண்டும். இதில் தமிழ்க் காங்கிரசிறகும் தமிழரசுக்கும் வித்தியாசமுண்டு. தமிழ்க் காங்கிரசில அங்கீகாரம்ரத்துச் செய்யப்படலாம் ஆனுல் 5 ஆண்டுகள் இயங்கினுல் மீண்டும் அங்கீகாரம் பெறலாம் திரு. குமார்பொன்னம்பலம்விரும்பினுல் தமிழர் விடுதலைக் கூட்டணியைக் குலைத்து தமிழ் காங்கிரசை கூட்டணியிலிருந்து விலக்கி தனித்து இயங்கட்டும். அந்தச் செய்கை மூலம் தமிழ்மக்களுடைய வெறுப்பையும் சம்பாதிக்கட்டும்.

"மட்டுநகர் இரட்டை அங்கத்தவர் தொகுதி. இரண்டு பேரைக் கூட்டணி நியமித்தது. இரண்டுபேருக்கும் கூட்டணிச் சின்னமாகிய உதயசூரியன் கொடுக்கமுடியாது. ஆகையினுல் ஒருவருக்கு வீடு கொடுக்கப்பட்டது. அதைப் போல ஒற்றை தொகுதியில் சிலருக்கு உதயசூரியனும் ஒருவருக்கு மட்டும் சைக்கிளும் கொடுத்தால் அது ஒரு கேலிக்கூத்தாக முடியும்.

நான் தமிழ்க்காங்கிரசை குழிதோண்டிப்புதைக்கவில்லை. சென்ற 5 ஆண்டுகளாக கூட்டணியில் தமிழ்க்காங்கிரசின் சார்பில் இயங்கியவர்களாகிய திருவாளர்கள் கா. சிவசிதம்பரம், வி. ஆனந்தசங்கரி, ஆர். விஸ்வநாதன் ஆகியோர் என்னுடன் தோளோடு தோள் நின்று கூட்டணிக்குப் பாடுபடுகிருர்கள். கூட்டணியை உடைத்து தமிழ் மக்களுடைய ஒற்றுமையை குழிதோண்டிப் புதைக்க முற்படுகிறவர்கள் எம்மைப்பார்த்து இப்படிக் கூறுவது வேதனைக்குரிய விடயம். (கா-இ)

### பொலிஸார்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்று முறையிட்டதும், தெரிந்ததே. இவர்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து காங்கேசன்துறை தலைமைப் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு. பத்மநாதன் உடனடியாக விசாரணைகள் மேற்கொண்டார். இந்த விசாரணைகளைத் தொடர்ந்தே மேற்படி இடமாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களை தற்காலிகமாக வேலைநீக்கம் செய்வது குறித்து ஆலோசனை நடைபெற்று வருவதாகவும் தெரிய வருகிறது.

### வேலைக்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமாக இ. போ. ச. தலைமைப் பீடம் நேற்றுப் பிற்பகல் விடுத்த அவசரக் கோரிக்கையில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சகல ஊழியர்களும் உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும் என்றும் வேலைக்குத் திரும்பாத பட்சத்தில் வேலைநிறுத்தம் செய்யும் ஊழியர்கள்இடமாற்றம் செய்யப்பட்டு அவர்களுக்குப்பதிலாக, கொழும்பிலிருந்து ஊழியர்கள் வரவழைக்கப்பட்டு இங்கு நியமிக்கப்படுவார்கள் என்றும், இந்த வேண்டுகோளை ஊழியர்கள் நிச்சயம் கடைப்பிடிப்பார்கள் என்று நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனுல், வேலை நிறுத்தம் செய்யும் ஐ. தே. க, ல ச ச. க, ஸ்ரீ ல சு. கட்சி தொழிற்சங்க ஊழியர்கள் இக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். இதன் எதிரொலியாக வேலை நிறுத்தம் தொடர்ந்தும் நடைபெறுகிறது.

(நமது உடுப்பிட்டி நிருபர் அறிவிப்பதாவது)

பருத்தித்துறை இ போ. ச. டிப்போவைச் சேர்ந்த ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் பருத்தித்துறை டிப்போவில் இருந்து சேவையிலீடுபடும் யாழ்ப்பாணம். கொடிகாமம் மற்றும் தூர இடங்களுக்கான சகல பஸ் சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இவ்வேலை நிறுத்தத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சிகளைச் சேர்ந்த மூன்று தொழிற் சங்கங்களும் கூட்டாகக் குதித்துள்ளன வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர மேலதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை என்று தெரிகிறது.

### இன்று

அரியாலை, சனி

கைதடி நவீலட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று நடைபெறும். வடமாநில கல்வி அதிபதி திரு. கே. சிவநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்

ஃ ஃ ஃ

வைத்திஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று நடைபெறும். பிரதம அதிதிகளாக யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபர் திரு. ஈ. கே. சண்முகநாதனும் அவரது பாரியாரும் கலந்துகொள்ளுவார்கள்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ந்திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.